செய்தி வெளியீடு எண். 226 நாள். 24.04.2018

# தேசிய ஊராட்சி தின சிறப்பு கிராமசபை கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்

திருத்தணி ஊராட்சி ஒன்றியம், பெரிய கடம்பூர் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக கிராம சுயராஜ்ஜியம் இயக்கத்தில் தேசிய ஊராட்சி தின சிறப்பு கிராமசபை கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன் ஆகியோர் இன்று (24.04.2018) கலந்துக்கொண்டனர்.

முன்னதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் தூய்மை சேவை உறுதிமொழியினை கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திருமதி.ஜே.சித்ரா அனைவரையும் வரவேற்று கிராமசபை கூட்டப்பொருள்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் முன்னிலையில் பொதுமக்கள் முன்பு வாசித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது :

தேசிய ஊராட்சி தின சிறப்பு கிராமசபை கூட்டத்தில் பெரிய கடம்பூர் ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் அடுத்த 5 ஆண்டுகளுக்கான வளர்ச்சி குறித்த முக்கிய தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். ஊராட்சியின் வளர்ச்சிக்கான அனைத்து தேவைகளையும் கிராம மக்கள் ஒன்றிணைந்து நிறைவேற்றிக்கொள்ள இது ஒரு நல்ல நிகழ்வாகும். மேலும், பொதுமக்களுக்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கும் காப்பீட்டு திட்டங்களைப்பற்றி பொதுமக்கள் தெரிந்துக்கொண்டு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ரூ.12 மற்றும் ரூ.330 ஆகிய காப்பீடு திட்டத்தை வங்கிகளில் செலுத்துவதன் மூலம் எதிர்பாராத விபத்துகள் நேரும் பட்சத்தில் ரூ.4 இலட்சம் வரை இழப்பீடு பெற்றுக்கொள்ளலாம். ஆகையால் அனைவரும் இக்காப்பீட்டு திட்டத்தில் சேர வேண்டும். மின்சார இணைப்பு இல்லாத வீடுகளில் மின்சார இணைப்பு பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கலாம். 0-2 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் தடுப்பூசிகளை போட்டுக்கொள்ளலாம். வங்கிக் கணக்கு இல்லாதவர்கள் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து புதிய வங்கி கணக்குகளை தொடங்கலாம். இவை அனைத்தையும் பொதுமக்கள் நன்கு தெரிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

பின்னர், புதிய வங்கி கணக்கு தொடங்குவதற்கான விண்ணப்பங்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கிராம மக்களிடமிருந்து 100-க்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.ஸ்ரீதர், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் திரு,ஜெயராமன், திருத்தணி வட்டாா வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திருமதி.ஜே.சித்ரா, திருத்தணி வட்டாட்சியர் திரு.நரசிம்மன், அரசு அலுவலர்கள் மற்றும் கிராம மக்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**